பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
நெ.100, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை-28.

**சுற்றறிக்கை எண்.06/2023**

**க.எண்.23217/எஸ்1/2023, நாள். 23.06.2023**

பொருள் : அலுவலக நடைமுறை – சார்பதிவாளர் அலுவலகங்களில் ஆவணம் எழுதுபவர்கள், இடைத்தரகர்களை அனுமதிக்கத் தடை – கூடுதல் அறிவுரைகள் வழங்குதல் - சுற்றறிக்கை - தொடர்பாக.

பார்வை :

1. பதிவுத்துறை தலைவர், சென்னை, ஆணை எண்.61349/இ1/2006, நாள்.18.12.2006.
2. பதிவுத்துறை தலைவர், சென்னை, கடிதம் எண்.58779/இ1/2009, நாள்.18.11.2009.
3. பதிவுத்துறை தலைவர், சென்னை, சுற்றறிக்கை எண். 25-2/S2/2010, நாள்.21.06.2010.
4. பதிவுத்துறை தலைவர், சென்னை, ஆணை எண்.61492/எஸ்1/2010, நாள்.19.11.2010.
5. பதிவுத்துறை தலைவர், சென்னை, சுற்றறிக்கை எண்.50584/S1/2013, நாள்.09.02.2013.
6. பதிவுத்துறை தலைவர், சென்னை, சுற்றறிக்கை எண்.7513/S1/2020, நாள்.25.02.2020.
7. பதிவுத்துறை தலைவர், சென்னை, சுற்றறிக்கை எண்.05/2023 (க.எண்.23217/எஸ்1/2023, நாள்.22.06.2023)

***************

பார்வை (7)-ல் காணும் இவ்வலுவலக சுற்றறிக்கையில் சார்பதிவாளர் அலுவலகங்களில் ஆவணம் எழுதுபவர்கள், இடைத்தரகர்களை அனுமதிக்கத் தடை தொடர்பாக பல்வேறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

Verified RealEstate™

அதில் பத்தி 2 (1) ல்

"அலுவலக நிமித்தமாக சார்பதிவாளரால் அழைக்கப்பட்டால் தவிர அலுவகத்திற்குள் ஆவணம் எழுதுபவர்கள் நுழையக்கூடாது என்ற விதியினை சார்பதிவாளர்கள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அலுவலக நிமித்தமாக சார்பதிவாளரால் அழைக்கப்படுவது குறித்து கீழ்கண்ட அறிவுரை கூடுதலாக வழங்கப்படுகிறது:-

> ஆவணம் எழுதுபவர்களை பதிவு மற்றும் அலுவலகம் தொடர்பான பணி நிமித்தமாக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைக்க வேண்டியிருந்தால், எந்த தேதியில் எந்த நேரம் முதல் எந்த நேரம் வரை ஆவணம் எழுதுபவர்கள் சார்பதிவாளரை சந்திக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு சார்பதிவாளரால் ஆவணம் எழுதுபவர்களுக்கு அழைப்பாணைக் கடிதம் முன்னதாகவே அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு சார்பதிவாளரால் குறிப்பிடப்படும் நாள் மற்றும் நேரத்தில் மட்டுமே ஆவணம் எழுதுபவர்கள் சார்பதிவாளர் அலுவலகங்களுக்குள் அனுமதிக்கப்படலாம். அவ்வாறு சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் ஆவண எழுத்தர்கள் அனுமதிக்கப்படும் நேரம் 10 நிமிடம் முதல் 15 நிமிடத்திற்குள்ளாகவே இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

இந்த சுற்றறிக்கையினை ஆவணம் எழுதுவோர் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் அனைத்து சார்பதிவாளர் அலுவலக அறிவிப்பு பலகையில் விளம்பரம் செய்யவும், அனைத்து உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்களுக்கும் சார்பு செய்து ஒப்புதல் பெற்று வைத்துக்கொள்ளவும் சம்மந்தப்பட்ட மாவட்டப்பதிவாளர் வழி அனைத்து சார்பதிவாளர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

Verified RealEstate ™

இந்த சுற்றறிக்கையினை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கவும் கோரப்படுகிறது.

ஒப்பம்/- 23.06.2023

பதிவுத்துறை தலைவர்

/ஆணையின்படி/

23/6/2023

கூடுதல் பதிவுத்துறை தலைவர்

(சீட்டு மற்றும் சங்கம்)

**பெறுநர்**

1. அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள்,
2. அனைத்து மாவட்டப்பதிவாளர்கள் (நிருவாகம்) மற்றும் (தணிக்கை)
3. அனைத்து சார்பதிவாளர்கள்

**நகல் :**

1. அரசு செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை, தலைமைச்செயலகம், சென்னை-600 009 (தகவலுக்காக)
2. இயக்குநர், பதிவுத்துறை பயிற்சி நிலையம்.
3. CS – பிரிவு, பதிவுத்துறை தலைவர் அலுவலகம், (இணையதளத்தில் பதிவேற்றம் செய்திட).
4. முக்கிய ஆணைத் தொகுப்பு.

Verified RealEstate ™